[illegible]

Q25:417
N31
170638

பரிதிமாற்கலைஞன் நீதி நூல் மாலை—1

உ

பொங்கும் மங்களம் எங்குந் தங்குக.

குமரகுருபர சுவாமிகள்

அருளிச்செய்த

சகலகலாவல்லி மாலை

என்னும்

சரஸ்வதி ஸ்தோத்திரம்

மூலமும் - உரையும்.

வி. சூ. சுவாமிநாதன்,

பப்ளிஷர் : : மதுரை.

[விலை 0—1—0

29 OCT 1951

Q25·417
M31
V20638

-600 008.
120638
2571

Q25.47
N31

உ

குமரகுருபர சுவாமிகள்

சரித்திரச் சுருக்கம்.

—:O:—

பாண்டிநாட்டைச்சேர்ந்த ஸ்ரீவைகுண்டம் என்னும் கைலாசபுரத்திலே, சைவவேளாளர் குலத்திலே சுமார் 300 வருடங்களுக்கு முன்னே இருந்த ஷண்முகசிகாமணிக் கவிராயரும், அவரது மனைவியராகிய சிவகாமி அம்மையாரும் செய்ததவப்பேற்றின் பயனாக ஓர் அருந்தவப்புதல்வர் தோன்றினர். அப்புத்திரர்பிறந்து ஐந்தாண்டு வரையும் வாய்பேசாதிருத்தலைக்கண்டதாய் தந்தையர், மனமிகவருந்தி, திருச்செந்தூர் சென்று அங்கே கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஆறுமுகப்பெருமானை வழிபட, அப்பெருமான் திருவருளால் அவர் ஊமை நீங்கப்பெற்று, அப்பெருமான் மீது தோத்திரமாக, 'கந்தர்கலிவெண்பா'. என்னும் பாடலை அருளிச்செய்தனர். முருகக்கடவுள் அவருடைய கனவிலே குமர வடிவம் கொண்டு தோன்றி, 'நீ குருபரனாகுக' என்று அருளிப் போயினமையால் அன்று தொட்டு, அவர் குமரகுருபரர் என அழைக்கப்பட்டார்.

ஆறுமுகப்பெருமான் ஆணையின்படி குமரகுருபரர், ஒரு சமயம் வடதிசை செல்லும்போது, திருப்பரங்குன்றத்தில் தங்கி இருந்து, மதுரை மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், என்னும் நூலைப் பாட, அக்காலத்தில் மதுரையை ஆண்ட அரசராகிய திருமலை நாயக்கர் என்பவர், மீனாட்சி அம்மையின் திரு அருளினால் அதனை அறிந்து, அப்பிள்ளைத்தமிழை, அம்பிகையின் சன்னதியில் அரங்கேற்றுமாறு வேண்டினர். அவரும் அவ்வாறேசெய்ய, அப்பிள்ளைத் தமிழின் வருகைப் பருவத்து ஒன்பதாவது செய்யுளாகிய 'தொடுக்குங் கடவுட் பழம்பாடற்றொடையின் பயனே' என்று தொடங்கும் செய்யுளுக்குக் குமரகுருபரர், பொருளுரைக்குங்காலத்து மீனாட்சி அம்மையார், அருச்சகரது பெண்ணைப்போல மாறு வேடங் கொண்டு திருமலை நாயக்கர் கழுத்தில் அணிந்திருந்த மணி வடத்தைக் கழற்றி, குமரகுருபரர் கழுத்தில் இட்டு மறைந்தனர். பின்னர் குமரகுருபரர், அவ்வம்மையாரின்மீது 'மீனாட்சி அம்மை குறம்' 'மீனாட்சி அம்மை இரட்டை மணிமாலை' 'மதுரைக் கலம்பகம்' 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூல்களை இயற்றி அருளினர்.

பின்பு திருவாரூருக்குச் சென்று, அங்கே சாக்ஷாத் காருண்ய மூர்த்தியாய்க் கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கும், தியாகராஜப் பெருமானது திருவடிகளை வணங்கி திருவாரூர் நான்மணி மாலை' என்னும் பிரபந்தத்தைப்பாடி அருளினர். பிறகு தருமபுர ஆதீனத்தில் நான்காவது குருமூர்த்திகளாய் எழுந்தருளி இருந்த ஸ்ரீமாசிலாமணி தேசிக சுவாமிகளுடைய திருவருட் சிறப்பைக் கேள்வியுற்று அவரிடம் ஞானோபதேசம் பெற விரும்பி, அவர் கட்டளைப்படி, சிதம்பரம் செல்லப் புறப்பட்டு, வைத்தீசுரன் கோயிலை அடைந்து, குமரக்கடவுள் மீது முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தத்தைப் பாடினர். பின்பு, சீர்காழியைப் பணிந்து, சிதம்பரத்தை அடைந்து, திரிகாலங்களிலும் வழு

வாமல் சுவாமி தரிசனம் செய்துகொண்டு, தங்கி இருக்கும் நாளில் நடராஜப்பெருமான் மீது சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை என்னும் இரண்டு பிரபந்தங்களையும் பாடி அருளினர். புராணிகர், 'அந்நூலில் அமைந்துள்ள அரிய இலக்கணங்களையும்; சொற்சுவை பொருட்சுவைகளையும்நோக்கி, சுவாமிகளை அடைந்து வணங்கி வேண்டிக்கொள்ள, சுவாமிகள் அம்பிகையின்மீது சிவகாமி அம்மை இரட்டை மணிமாலை என்னும் ஓர் பிரபந்தத்தையும் செய்தருளினர். பின் தருமபுரம் வந்து அடைய மாசிலாமணி தேசிகர் அவருக்கு ஞானேபதேசம் செய்தார். அவருடைய கருணையை வியந்து, 'பண்டார மும்மணிக்கோவை' என்னும் பிரபந்தத்தைப்பாடி, அதனை அவ் வாசிரியர்க்குச் சமர்ப்பித்தனர்.

பின்பு தமது ஆசிரியருடைய கட்டளைப்படி தமக்குத் திருமலை நாயக்கரால் கொடுக்கப்பட்ட பொருளைக்கொண்டு காசிக்குச் சென்று, விசுவநாதப்பெருமான் மீது, காசிக்கலம்பகம் என்னும் நூலைப்பாடினர்.

அத்தலத்தில் வசித்துவரும் நாளிலே, அந்நகரத்தை ஆண்டு கொண்டிருந்த டில்லிபாட்சா என்னும் மகம்மதிய அரசனைக்கண்டு பேசி, தருமம் இயற்றுவதற்குத் தகுந்த, இடம் பெற விரும்பினர். ஆனல், அவ்வரசனது தாய் பாஷை இந்துஸ்தான். அவனுக்கோ தமிழ் தெரியாது. இவருக்கு இந்துஸ்தான் தெரியாது. ஆதலால், அவனுக்குரிய இந்துஸ்தான் பாஷையை, அறிவித்து அருளும்படி, சகல பாஷைகளிலும் வல்ல, சரஸ்வதியின்மீது, "சகல கலாவல்லி மாலை" என்னும் பிரபந்தத்திலே ஒன்பது பாடல்களைப் பாடியும் அருள்செய்யாதிருந்தமையைக் கண்டு 'மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென், பண்கண் டளவிற் பணியச்செய் வாய்' என்னும் பத்தாவது பாட்டை அருளிச்செய்தார். உடனே சரஸ்வதியின் திருவருளினல் இந்துஸ்தான் பாஷையை நன்ருக

அறிந்து, மகம்மதிய அரசனிடம் சென்று பல அற்புத காரியங்களை நிகழ்த்தி அந்த அரசனால் இடம் தரப்பட்டு, தமது பெயரால் பல சைவமடங்களும், கேதாரநாதர் ஆலயமும் அமைத்தருளினர்.

பின்னர் மூன்று முறை தருமபுரத்திற்கு வந்து தமது ஆசிரியரைத் தரிசித்து, காசிக்குச் சென்று, சைவசமயத்தின் வளர்ச்சியைக்கருதி அநேக காரியங்களைச் செய்து, காசியில் ஓர் வைகாசி மாதத்து கிருஷ்ணபக்ஷத்திருதியையில், இவ்வுலக வாழ்வை நீத்து பேரின்ப வாழ்வை எய்தினர்.

N. கிருஷ்ணஸ்வாமி ஐயர்,
தமிழ்ப்பண்டிதர்,
சேதுபதி ஹைஸ்கூல்,
மதுரை.

ஸ்ரீ:

சகலகலாவல்லி மாலை

மூலமும் உரையும்

1. வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!

(பதவுரை). சகம் எழும் - இருவகைப்பட்ட ஏழு உலகங்களையும் (பதினான்கு உலகம்), அளித்து - காப்பாற்றி, உண்டான் - தனது வயிற்றில் அடக்கிக்கொண்டவனாகிய மகாவிஷ்ணு, உறங்க - பாற்கடலில் படுத்து நித்திரை செய்யவும், ஒழித்தான் - சம்ஹாரம் செய்தவனாகிய உருத்திரன், பித்தாக - பைத்யம் கொள்ளவும், உண்டாக்கும் வண்ணம் - உலகத்தை சிருஷ்டிக்கும் வகையை, கண்டான் - அறிந்தவனாகிய பிரம்மதேவன், சுவைகொள் - இன்பத்தை யடைகின்ற, கரும்பே - கரும்புபோன்றவளே! சகலகலாவல்லியே - சகல சாஸ்திரங்களிலும் வல்ல சரஸ்வதியே! வெண் - வெண்மையாகிய, தாமரைக்கு அன்றி - தாமரை மலருக்கே அல்

லாமல், நின்பதம் - உன்னுடைய திருவடிகளே, தாங்க - தாங்கு தற்கு, என் - எனது, வெள்ளே - குற்றமில்லாத, உள்ளம் - மன மாகிய, தண் - குளிர்ச்சி பொருந்திய, தாமரைக்கு - தாமரை மல ருக்கு, தகாது கொலோ - கூடாதோ ? (கூடும் என்றபடி).

(கருத்துரை). கரும்பு போல்பவளே ! வல்லிபோல்பவளே ! எனது மனதாகிய தாமரையிலிருந்து எழுந்தருளி அருள் சுரக்க வேண்டும். (1)

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசநத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனகக் குழையுமைம்பாற்
காடுஞ் சுமந்த கரும்பே !
சகல கலாவல்லியே !

(ப - ரை). பங்கய ஆசனத்தில் - வெண் தாமரை மலரா கிய ஆசனத்தில், கூடும் - சேர்ந்திருக்கின்ற, பசும் - பசுமையாகிய, பொன் கொடியே - பொற்கொடி போன்ற இடையை யுடைய வளே ! கனகக்குழையும் - பொன்னுலாகிய குண்டலங்களேயும், ஐம்பால் காடும் - ஐந்து விதமாக முடிக்கப்படுகின்ற மிகுந்த கூந் தலேயும், சுமக்கும் - தாங்கிக்கொண்டிருக்கின்ற, கரும்பே - கரும்புபோலும் இனிமையைச் செய்கின்றவளே ! சகலகலாவல் லியே - சகல சாஸ்திரங்களிலும் வல்ல சரஸ்வதியே ! நாடும் - பெரியோர்களால் ஆராயப்படுகின்ற, பொருட்சுவை - பொருளின் சுவையும், சொல்சுவை - வார்த்தைகளின் இனிமையும், தோய் தர - பொருந்தியிருக்கும்படியான, நாற்கவியும் - நான்கு வித

மான கவிகளையும், பாடும் பணியில் - பாடும்படியான தொழிலில், பணித்து அருள்வாய் - (என்னை) செலுத்தி அருள்வாயாக.

நாற்கவியாவன - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம்.

ஐம்பாலாவன - கொண்டை, முடி, சுருள், பனிச்சை, குழல்.

(க - ரை). கொடியே! கரும்பே! அடியேனுக்கு சொற்சுவை, பொருட்சுவை நிறைந்த கவிதைகள் புனையும் சக்தியையருளவேண்டும். (2)

3. அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே!

(ப - ரை). சகலகலாவல்லியே - சகல சாஸ்திரங்களிலும் வல்ல சரஸ்வதியே! உளங்கொண்டு - உன்னை மனதில் நினைத்து, தெள்ளி தெளிக்கும் - மிகவும் (உனது பெருமையைத்) தெளிவிக்கப்பட்ட, பனுவல்புலவோர் - நூல்களைக்கற்று ஆராய்ச்சி செய்த புலவர்களாகிய மேகங்கள், கவிமழை - செய்யுட்களாகிய மழையை, சிந்தக்கண்டு - சிந்துவதைப் பார்த்து, களிக்கும் - சந்தோஷிக்கின்ற, கலாபம் - தோகைகளையுடைய, மயிலே - மயில் போன்ற சாயையை யுடையவளே! அளிக்கும் - (எல்லாச் சிறப்புக்களையும்) கொடுக்கும்படியான, செழும் தமிழ் - சிறந்த தமிழ் பாஷையாகிய, தெள் அமுது - தெளிந்த தேவாமிர்தத்தை, ஆர்ந்து-உட்கொண்டு, உன் - உன்னுடைய, அருள் - கிருபையாகிய, கட

வில் - சமுத்திரத்தில், குளிக்கும்படிக்கு - மூழ்கும்படிக்கு, என்று - எப்பொழுது, கூடும்கொல் - கைகூடுமோ?

(க - ரை). மயில்போல்பவளே! தமிழ் மொழியை நன்கு கற்று, அதனால் நின்னைத் தொழுது வணங்கும்படியான பாக்கியத்தைக் கொடுத்தருளவேண்டும். (3)

4\. தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே!

(ப - ரை). வடநூல் - சமஸ்கிருதமாகிய, கடலும் - சமுத்திரமும், தேக்கும் - நிறைந்த, செழும் தமிழ் செல்வமும் - சிறந்த தமிழ் பாஷையாகிய செல்வமும் ஆகி, தொண்டர் - உனது அடியார்களின், செந்நாவில் நின்று - சிறந்த நாவினிடத்திருந்து, காக்கும் - காப்பாற்றுகின்ற, கருணைக்கடலே - கிருபா சமுத்திரமே! சகலகலாவல்லியே - சகல சாஸ்திரங்களிலும் வல்ல சரஸ்வதியே! தூக்கும் - பாடல்களும், பனுவல்துறை தோய்ந்த - நூல் துறைகளில் பயின்ற, கல்வியும் - படிப்பும், (வேதாந்தக் கல்வி) சொல்சுவை தோய் - சொற்களினிடத்துச் சுவை பொருந்திய, வாக்கும் - சொல்லும் வன்மையும், பெருக - அதிகரிக்கும்படியாக, பணித்து அருள்வாய் - எனக்குக் கொடுத்தருள்வாயாக.

(க - ரை). இருமொழிக்கும் தலைவியாகிய நீ, அவ்விரு மொழியிலும் பாண்டித்தியமுடையனாக அடியேனைச் செய்ய வேண்டும். (4)

5. பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
னெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே!

(ப - ரை). நெடும் - நீண்ட, தாள் - பாதத்தையுடைய, கமலத்து - தாமரையினிடத்து வசிக்கும்படியான, அஞ்சம் துவசம் - அன்னமெழுதிய கொடியை, உயர்த்தோன் - உயர்த்திக் கட்டிய பிரம்மதேவனது, செந்நாவும் - சிறந்த நாவினிடத்தும், அகமும் - மனதினிடத்தும், வெள்ளை - வெண்மையான, கஞ்சம் தவிசு ஒத்து - தாமரை ஆசனத்தைப்போல் நினைத்து, இருந்தாய் - வீற்றிருக்கின்றவளே! சகலகலாவல்லியே - சகல சாஸ்திரங்களிலும் வல்ல சரஸ்வதியே! பஞ்சு அப்பி - செம்பஞ்சுக் குழம்பு அப்பப் பெற்றதும், இதம்தரும் - அடியார்களுக்கு இன்பத்தைக் கொடுக்கக்கூடியதுமான, செய்ய - சிவந்த, பொன்பாத பங்கேருகம் - பொன்மயமாகிய உனது திருவடித் தாமரைகள், என் - எனது, நெஞ்சம் - மனமாகிய, தடத்து - தடாகத்தினிடத்து, அலராததென் - மலராதிருப்பதற்குக் காரணமென்ன?

(க - ரை). அம்சத்துவசமுயர்த்தோன் அகத்துறைந் திருந்தாயாகிய நீ, அடியேனுடைய மனதினிடத்து வந்திராதது என்னே! அடியேனதற்கு அருகனல்லனோ? (5)

600 008.
120638
025:417

6. பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்!
சகல கலாவல்லியே!

(ப - ரை). எழுதா - யாவராலும் எழுதப்படாத, மறையும் - வேதங்களினிடத்தும், விண்ணும் - ஆகாயத்தினிடத்தும், புவியும் - பூமியினிடத்தும், புனலும்-தண்ணீரினிடத்தும், கனலும் - அக்னியினிடத்தும், வெம் - கொடிய, காலும் - காற்றினிடத்தும், அன்பர் கண்ணும் - உன்னை நினைக்கும் அடியார்களிடத்தும், கருத்தும் - அவர்களுடைய எண்ணத்தினிடத்தும், நிறைந்தாய் - நிறைந்திருக்கின்றவளே! சகலகலாவல்லியே - சகல சாஸ்திரங்களிலும் வல்ல சரஸ்வதியே! பண்ணும் - இராகமும், பரதமும் - பாத நாட்டியமும், கல்வியும் - படிப்பும், தீம்சொல் பனுவலும் - இனிய சொற்களமைந்த செய்யுட்களும், (ஆகிய இவற்றை) யான் - நான், எண்ணும்பொழுது - நினைக்கும்பொழுதெல்லாம், எளிது - இலேசாக, எய்த - அடையும்படி, நல்காய் - உனது அருளைக்கொடுப்பாயாக.

(க. - ரை). எங்கும் நிறைந்த அம்மையே! கல்வி - விஷயமாக யான் எதை வேண்டினும் அடியேனுடைய பக்தி காரணமாக வேண்டியவற்றை யருள்செய்வாயாக. (6)

7. பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதமுந் தெளிக்கும்வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே!

(ப - ரை). உளம்கொண்டு - மனதில் தியானித்து, தீட்டும் - எழுதுகின்ற, கலைதமிழ் - தமிழ் சாஸ்திரங்களாகிய, தீம்பால்அமுதம் - இனிய பாலையும் தண்ணீரையும், தெளிக்கும் வண்ணம் - பிரித்றியும் வண்ணம், காட்டும் - காண்பிக்கின்ற, வெள் - வெண்மையாகிய, ஓதிமப்பேடே - பெண் அன்னம் போன்றவளே! சகலகலாவல்லியே - சகல சாஸ்திரங்களிலும் வல்ல சரஸ்வதியே! பாட்டும் - செய்யுளும், பொருளும் - அதனாலறியப்படும் பொருளும், பொருளால் பொருந்தும் பயனும் - அப்பொருளை அறிந்ததனாலடையக்கூடிய பிரயோஜனமும், என்பால் - என்னிடத்து, கூட்டும்படி - வந்து சேரும்படி, நின் கடைகண் நல்காய் - உனது கடைக்கண் பார்வையைச் செலுத்தி என்னைப் பாதுகாப்பாயாக.

(க - ரை). சகலகலாவல்லியே! நீ எனக்குக் கல்வியறிவையுண்டுபண்ணுவது மட்டும் போதாது. அவற்றின் தன்மையைத் தெளிவாக வுணர்ந்து, அவற்றின்படி நடக்கும்படிக்கும் அருள் பாலிக்கவேண்டும். (7)

8. சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
சகல கலாவல்லியே!

(ப - ரை). ஒருகாலமும் - எந்தக்காலத்திலும், சிதையாமை - கெடாதிருக்கும் தன்மையை, நல்கும் - கொடுக்கின்ற, கல்வி - படிப்பாகிய, பெரும் - பெரிய, செல்வம் பேறே - செல்வத்தின் பயனே! சகலகலாவல்லியே - சகல சாஸ்திரங்களிலும் வல்ல சரஸ்வதியே! சொல் - சொல்லும்படியான, விற்பனமும் - சாமார்த்தியமும், அவதானமும் - (ஒரே காலத்தில் பல விஷயங்களைக் கவனிக்கும்) அவதான சக்தியும், கல்வி - கல்வியை, சொல்லவல்ல - அயலாருக்கு எடுத்துச்சொல்ல வல்ல, நல்-நல்ல, வித்தை - படிப்பையும், தந்து - அடியேனுக்குக் கொடுத்து, அடிமை கொள்வாய் - என்னையும் உனது அடியவனாகச் செய்து கொள்வாய் (இவ்வாறு செய்தல்), நளினம் - தாமரையாகிய, ஆசனம் - ஆசனத்தினிடத்து, சேர் - எழுந்தருளியிருக்கின்ற, செல்விக்கும்- லக்ஷுமி தேவிக்கும், அரிது - முடியாத காரியமாகும்.

(க - ரை). சகலகலாவல்லியே! நீ எனக்கு அறிவுடையார் செய்யும் அவதானமும், கல்வி சொல்லவல்ல நல் வித்தையையும் கொடுத்தருளவேண்டும். (8)

9\. சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகல கலாவல்லியே!

(ப - ரை), நிலம் - பூமியினிடத்து, தோய் - படியும்படி யான, புழைக்கை - துவாரத்தோடு கூடிய கையையுடைய, நல் குஞ்சரத்தின் பிடியோடு - நல்ல பெண் யானையோடு, அரச அன்னம் - அரச அன்னமும், நடைகற்கும் - உனது நடையைக் கற்றுக் கொள்ளும்படியான, பதாம்புயத்தாளே - திருவடித் தாமரைகளை யுடையவளே! சகலகலாவல்லியே - சகல சாஸ்திரங்களிலும் வல்ல சரஸ்வதியே! சொற்கும் - சொற்களுக்கும், பொருட்கும் - அதனாலறியப்படும் பொருளுக்கும், உயிராம் - உயிராகிய (நின்னை), மெய்ஞானத்தின் - உண்மை யறிவின், தோற்றம் என்ன - உருவமே என்று சொல்லும்படியாக, நிற்கின்ற நின்னை - நிற்கின்ற உன்னை, நினைப்பவர் யார் - நினைக்கக்கூடியவர் எவர்? (உனது அருள் பெற்றவரேயாவர்).

(க - ரை). அம்மையே உன் பெருமையை உள்ளபடி யறிந்தவர்கள் ஒருவருமில்லை. ஆதலின், அறிவற்ற கடையேன் நின்னை எவ்வாறுணர்வேன். (9)

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேம்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம் பலகோடி
யுண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே!

(ப - ரை). படைப்போன்முதல் ஆம்-உலகத்தைப் படைக்கின்ற பிரம்மதேவன் முதலாக, விண்கண்ட - ஆகாயத்தில் காணப் படுகின்ற, தெய்வம் - தெய்வங்கள், பலகோடி - பல கோடிக்கணக்காக, உண்டேனும் - இருந்தபோதிலும், விளம்பில் - சொல்லுமிடத்து; உன்போல் - உன்னைப்போல, கண்கண்ட தெய்வம் - பிரத்தியக்ஷமாகக் காணப்படுகின்ற உண்மையாகிய தெய்வம், உண்டோ - வேறு ஏதேனுமிருக்கின்றதோ? (இல்லை.) சகலகலா வல்லியே - சகல சாஸ்திரங்களிலும் வல்ல சரஸ்வதியே! மண் கண்ட - பூமியை நோக்கி இருக்கின்ற, வெண் - வெண்மையாகிய, குடைகீழ்ஆக - குடையின் கீழாக இருந்து, மேம்பட்ட - மேன்மையையடைந்த, மன்னரும் - அரசர்களும், என் - என்னுடைய, பண் - இசைப்பாடலை, கண்ட அளவில் - பார்த்த மாத்திரத்தில், பணியச்செய்வாய் - என்னை வணங்கும்படி செய்வாயாக.

(கு - ரை). அம்மையே! மன்னரும் கண்டு வணங்கும்படி யான் [illegible] அடி[illegible] அருளவேண்டும். (10)

முற்றிற்று.

120638

பரிதிமாற்கலைஞன் நீதி நூற் மாலை — மலர்.

1	உலகநீதி மூலமும் உரையும்	0	0	9
2.	ஆத்திசூடி மூலமும் உரையும் ...	0	0	9
3.	கொன்றைவேந்தன் மூலமும் உரையும் ...	0	0	9
4.	வெற்றிவேற்கை மூலமும் உரையும் ...	0	0	9
5.	மூதுரை மூலமும் உரையும் ...	0	0	9
6.	நல்வழி மூலமும் உரையும் ...	0	0	9
7.	நன்னெறி மூலமும் உரையும்	0	0	9
8.	நீதிநெறி விளக்கம் மூலமும் உரையும்	0	4	0
9.	நீதிவெண்பா மூலமும் உரையும் ...	0	4	0
10.	சகலகலாவல்லிமாலை மூலமும் உரையும்...	0	1	0
11.	மீனாக்ஷி எண்சுவடி	0	1	0

அதிகப்பிரதிகள் ஆர்டர் செய்பவர்களுக்குத் தகுந்த கமிஷன் தரக்கூடும். எங்கள் விபரமான புத்தக ஜாப்தாவிற்கு உடனே எழுதுங்கள்.

வி. சு. சுவாமிநாதன்,

புஸ்தக வியாபாரி, மதுரை.

Copies can be had of :

R. V. NATHAN BROS.,

7, Thanikachalam Pillai Street,

Triplicane, Madras